ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1924/ 7 - 2015 ජූලි මස 20 වැනි සඳුදා - 2015.07.20
*1924/7 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

எனது இலக்கம் : *01/10/03/04.*

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்பட்ட நியமனங்கள்

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண ஆளுநர் எம். பீ. ஜயசிங்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

1. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எச். எம். ஜீவன்த ஹேரத் அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, 2015.06.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண வீடு ஆணையாளராக பதிற் கடமை ஆற்றுவதற்கு.

2. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யூ. எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, 2015.06.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கங்கள் பதிவாளராக பதிற் கடமை ஆற்றுவதற்கு.

3. இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். எம். ஆனந்த விஜித குமார அவர்கள், 2014.10.17 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளராக (திட்டமிடல்) முழுநேர பதிற் கடமை ஆற்றுவதற்கு.

4. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். எம். விஜேனாயக அவர்கள், 2015.07.01 ஆந் திகதி முதல் ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

5. ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளராக (ஆளணி/பயிற்சி) பதிற் கடமையாற்றும் திரு. சுமித் சுரவீர அவர்கள், 2015.06.27 ஆந் திகதி முதல் 2015.07.06 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2015.06.27 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை நிர்வாக சேவையின் தரம் I யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். எம். எஸ். டி. ரத்நாயக அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளர் (ஆளணி/பயிற்சி) பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

6. ஊவா மாகாண சபை அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திரு. ஆர். எம். டி. பீ. ஹாதியல்தெனிய அவர்கள், 2015.06.27 ஆந் திகதி முதல் 2015.07.06 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2015.06.27 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். ஏ. எச். ஏ. சமரசிங்க அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக , ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பதிற்கடமை ஆற்றுவதற்கு.

7. ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளராக (பொறியியல் சேவை) பதிற்கடமை ஆற்றும் திரு. ஏ. ஏ. பீ. எஸ். கே. கருணாரத்ன அவர்கள், 2015.06.27 ஆந் திகதி முதல் 2015.07.06 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2015.06.27 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை பொறியியல் சேவையின் தரம் III யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி எஸ். கே. ஏகநாயக அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளர் (பொறியியல் சேவை) பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

8. ஊவா மாகாண சபையின் சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்நடத்தையும் சிறுவர் பாதுகாப்பும் மகளிர் விவகாரம் மற்றும் மின்சக்தியும் வலுசக்தியும் தொடர்பான அமைச்சின் செயலாளர் திரு. எல். எல். அனில் விஜேசிரி அவர்கள், 2015.07.06 ஆந் திகதி முதல் சுகயீன விடுமுறை எடுத்திருப்பதால், 2015.07.06 ஆந் திகதி முதல் அவர் மீள சேவைக்கு திரும்பும் வரை, இலங்கை நிர்வாக சேவையின் தரம் III யைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எச். பீ. ஏ. ஜீ. அனுருத்த அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண சபையின் சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்நடத்தையும் சிறுவர் பாதுகாப்பும் மகளிர் விவகாரம் மற்றும் மின்சக்தியும் வலுசக்தியும் தொடர்பான அமைச்சின் செயலாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

எம். பீ. ஜயசிங்க,
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
2015, யூலை 16.

8 - 43

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.